# 31. CAPACITY BUILDING

## 31.2 மாவட்ட பரவலாக்கப்பட்ட திட்டம் 2000 –2001 – மாவட்ட திட்டக்குழுக்களை செயல்முறைக்கு கொண்டு வருதல் – உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகளுக்கு பயிற்சி அளித்தல் – ரூ.142.76 இலட்சம் ஒதுக்கீடு

---

ஊரக வளர்ச்சி (தி2) துறை

அரசாணை (2ப) எண். 84 நாள் : 31.3.2001

படிக்க :

1. அரசாணை (நிலை) எண்.11, திட்டம் மற்றும் வளர்ச்சி (மா.தி2) துறை, நாள்.2.2.2001.
2. ஊரக வளர்ச்சி இயக்குநரின் நே.மு.கடித.எண்.43224/99/தி.அ.5, நாள்.7.3.2001.

**ஆணை**

2000–2001 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையில், மாவட்ட திட்டக் குழுக்களை இயக்குவதற்கு ரூ.3.00 கோடி ஒதுக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

2. மேற்கூறப்பட்ட அறிவிப்பிற்கிணங்க படிக்கப்பட்டவை ஒன்றில் உள்ள அரசாணையில் மாவட்ட திட்டக்குழுக்களுக்கு உதவிடும் வகையில் அமைக்கப்பட்ட மாவட்ட திட்டப்பிரிவுகளின் செயல்பாட்டிற்கும் திட்டமிடல் பயிற்சிக்கான செலவிற்கும் ரூ.157.24 இலட்சம் விடுவிக்கப்பட்டது.

3. தற்போது ரூ.3.00 கோடி மீதமுற்ற தொகை ரூ.142.76 இலட்சத்தை உள்ளாட்சி அமைப்பின் மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அதனைச் சார்ந்தவர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக விடுவிக்குமாறு ஊரக வளர்ச்சி இயக்குநர் படிக்கப்பட்டவை இரண்டில் காணும் தனது நே.மு. கடிதத்தில் அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மேலே பத்தி 3ல் உள்ள ஊரக வளர்ச்சி இயக்குநரின் கருத்துருவை அரசு கவனமாக பரிசீலனை செய்தது அதன்படி கீழ்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

இணைப்பில் கண்டுள்ளவாறு உள்ளாட்சி அமைப்பின் மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அதனைச் சார்ந்தவர்களுக்கு பயிற்சி அளிக்கும் பொருட்டு ரூ.142.76 இலட்சம் (ரூபாய் ஒரு கோடியே நாற்பத்தி இரண்டு இலட்சத்து எழுபத்து ஆறாயிரம் மட்டும்) ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு ஒப்பளிக்கப்படுகிறது. இத்தொகையை பெறவும் மேற்காணும் பயிற்சிக்கு செலவழிக்கவும் ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

5. முன்பத்தி 4ல் ஒப்பளிக்கப்பட்ட தொகை ரூ.142.76 இலட்சம் கீழ்காணும் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

> "2515–00–ஏனைய ஊரக வளர்ச்சி திட்டங்கள் – 101 ஊராட்சி நிறுவனம் – ஒன்பதாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – 11 மாநிலத் திட்டம் – ஜெஎப்– மாவட்ட பரவலாக்கப்பட்ட திட்டத்திற்காக உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதியுதவி – 09, உதவி மானியங்கள் 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான மானியங்கள் த.தொ.கு.எண்.2515–00–101 ஜெஎப் 0930)"

6. சம்பளக் கணக்கு அலுவலர் / கருவூல அலுவலர் இதற்கான பட்டியினை 2000–2001 ஆண்டுக்கான இறுதி திருத்த மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகைக்குள் அனுமதிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

7. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண்.56/இ.செ.(எஸ்எப்) /01, நாள்.31.3.2001–ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்

## 31. CAPACITY BUILDING

### உள்ளாட்சி அமைப்பின் மக்கள் பிரதிநிதிகள் அதனைச் சார்ந்தவர்களுக்கான பயிற்சி விவரம்

| வ. எண் | பயிற்சியாளர் | எண்ணிக்கை | மொத்த எண்ணிக்கை | பயிற்சி நாட்கள் | ஒரு நாளுக்கான ஒரு நபருக்கு செலவு ரூ. | மொத்த செலவு (இலட்சத்தில்) | திருத்தப் பட்ட செலவு |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | ஊராட்சித் தலைவர்கள் சுய உதவிக் குழு தலைவர்கள் (ஊராட்சிக்கு குறைந்த பட்சம் ஒருவர் வீதம்) | 12619<br>12719 | 25338 | 5 | 100 | 126.69 | 123.65 |
| 2. | ஊராட்சி ஒன்றிய தலைவர்கள் மற்றும் அலுவலர்கள் (ஊராட்சி ஒன்றியத்துக்கு ஒருவர் வீதம்) | 385<br>385 | 770 | 2 | 100 | 1.54 | 1.54 |
| 3. | மாவட்ட ஊராட்சி தலவர்கள் மற்றும் அலுவலர்கள் (மாவட்ட ஊராட்சிக்கு ஒருவர் வீதம்) | 29<br>29 | 58 | 2 | 100 | 0.116 | 0.12 |
| 4. | ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் (ஊராட்சிக்கு குறைந்த பட்சம் இருவர் வீதம்) | 25338 | 25338 | 1 | 35 | 8.86830 | 8.86 |
| 5. | ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்கள் | 6000 | 6000 | 1 | 35 | 2.10 | 2.10 |
| 6. | மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் | 600 | 600 | 1 | 35 | 0.21 | 0.21 |
| 7. | அரசு சாரா நிறுவன உறுப்பினர்கள் குறைந்தபட்சம் ஒரு மாவட்டத்திற்கு 10 அரசு சாரா நிறுவனத்திலிருந்து நிறுவனம் ஒன்றிற்கு இருவர் வீதம் (29 (10+10)22 | 600 | 600 | 3 | 100 | 1.80 | 1.80 |
| 8. | பெண் பிரதிநிதிகளுக்கு சிறப்பு பயிற்சி ஊராட்சி தலைவர்கள் ஊராட்சி மன்ற தலைவர்கள் மாவட்ட ஊராட்சி தலைவர்கள் | 4200<br>130.10 | 4200<br>140 | 2<br>2 | 50<br>100 | 4.20<br>0.28 | 4.20<br>0.28 |
| | | | | **மொத்தம்** | | | **142.76** |